# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

********

**முறையீட்டு மனு எண்: 210/2018/பே**

**ஆணை நாள் 07–02–2019.**

**திரு. ந.சந்திரன்,**
**த/பெ திரு.நல்லி,**
**க.எண். 12/36, குப்புரெட்டிபட்டி,**
**இனுங்கூர் அஞ்சல்,**
**குளித்தலை வட்டம்,**
**கரூர் மாவட்டம்–639110.** — **முறையீட்டு மனுதாரர்.**

முன்னாள்/இந்நாள் செயல் அலுவலர்,
மருதூர் பேரூராட்சி,
கரூர் மாவட்டம்,
**மற்றும் பலர்.** — **எதிர் மனுதாரர்கள்.**

ஆணை.

திரு. ந.சந்திரன், த/பெ திரு.நல்லி, கதவு எண். 12/36, குப்புரெட்டிபட்டி, குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் என்பவரது 10.10.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 12.10.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண் 210/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைக்ள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு. ந. சந்திரன் முறையீட்டு மனுதாரர், தனது முறையீட்டு மனுவில் கரூர் மாவட்டம், மருதூர் பேரூராட்சி முன்னாள்/இந்நாள் செயல் அலுவலர்கள் மற்றும் மருதூர் பேரூராட்சி இளநிலை உதவியாளர் மற்றும் குடிநீர் குழாய் பொருத்துநர் ஆகியோர்கள் மீது பல்வேறு புகார்களை தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

17.10.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து மருதூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

16.11.2018 நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 27.12.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து முறையீட்டு மனுதாரர், மருதூர் பேரூராட்சி முன்னாள்/இந்நாள் செயல்

அலுவலர்கள், அலுவலக இளநிலை உதவியாளர் திருமதி கனகவள்ளி, மற்றும் குடிநீர் குழாய் பொருத்துநர் திரு.ப.முத்துக்குமார் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

20.11.2018 நாளிட்ட மருதூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்களுக்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கையில், கரூர் மாவட்டம், மருதூர் பேரூராட்சியில் குடிநீர் குழாய் பொருத்துநர் பணியிடத்தில் பணிபுரியும் திரு.ப.முத்துக்குமார் என்பவர், மேற்படி பேரூராட்சியில் குடிநீர் திட்டப் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும், இதைத் தவிர அலுவலக பணிகள் எதனையும் மேற்கொள்வதில்லை எனவும், வரி வசூலர் மற்றும் இளநிலை உதவியாளர்கள் அலுவலகத்தில் இல்லாமல் மாற்றுப் பணியில் இருக்கும் தருணத்தில் பொதுமக்கள் நலன் கருதி திரு.ப.முத்துக்குமார் என்பவர் சொத்து வரி இரசீதில் கையொப்பமிட்டு வசூல் செய்துள்ளதாகவும், இதனால் பேரூராட்சிக்கு இழப்பு ஏதுமில்லை எனவும், மேற்படி பணியாளர் முறைகேடு எதனையும் செய்யவில்லை எனவும் தெரிவித்துள்ளார். திருமதி.கனகவள்ளி, இளநிலை உதவியாளர் அலுவலக பணிகளை மேற்கொள்வதுடன், செயல் அலுவலர் கூறும் அலுவலகப் பணிகளை செய்து வருகிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

திரு.ப.முத்துக்குமார், பொருத்துநர் குடிநீர் திட்டப் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும், அலுவலக கோப்புகள் மற்றும் ஆவணங்களில் இளநிலை உதவியாளர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோர் கையொப்பமிட்டு, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும், மேலும், இளநிலை உதவியாளர் மாற்றுப் பணியில் சென்றுள்ளபோது, பேரூராட்சியின் அன்றைய வசூல் தொகையினை பேரூராட்சி கணக்குகளில் தினசரி இருசால் செய்யவேண்டிய நிலையில், செயல் அலுவலரின் அனுமதியுடன் கையொப்பமிட்டு வங்கிகளில் பேரூராட்சி கணக்கில் மேற்படி பொருத்துநரால் இருசால் செய்யப்படுவதாகவும் இச்செயலினால் பேரூராட்சிக்கு இழப்புகள் ஏதுமில்லை எனவும் சம்பந்தப்பட்ட பணியாளர் முறைகேடு ஏதும் செய்யவில்லை எனவும் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மருதூர் பேரூராட்சியில் திரு.ப.முத்துக்குமார், குடிநீர் திட்ட பொருத்துநர், குடிநீர் திட்டப் பணிகள் தொடர்பாக, பேரூராட்சி அலுவலகத்தில் குடிநீர் திட்டம் தொடர்பான பதிவேடுகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வது, மற்றும் தினசரி நாட்குறிப்பு பதிவேடுகள், தினசரி மேற்கொள்ளப்படும் பணி விவரம் குறித்து பதிவு செய்து கையொப்பம் பெறுவது போன்ற பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சித் தேர்தலின்போது வேட்பாளர்களாக இருப்பவர்களுக்கு பேரூராட்சியின் சொத்துவரி, குடிநீர் கட்டண நிலுவையில்லா சான்று வழங்குவதை பொருத்தவரை பேரூராட்சியின் வரித்தண்டலாக பணிபுரியும் திரு.காந்தி என்பவர் உரிய பதிவேடுகளை ஆராய்ந்து, மேற்படி தொகைகள் செலுத்தப்பட்டிருப்பின் நிலுவையில்லா சான்றில் சுருக்கொப்பமிட்டு, அதன் பின்னர் இளநிலை உதவியாளர் நிலுவையில்லா சான்றில் சுருக்கொப்பமிட்டு செயல் அலுவலரின் கையொப்பத்துடன் சான்று வழங்கப்பட்டதாகவும், இதற்கும் குடிநீர் குழாய் பொருத்துநர் திரு.ப.முத்துக்குமார் என்பவருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மருதூர் பேரூராட்சியில் திருமதி.கனகவள்ளி, என்பவர் இளநிலை உதவியாளராக 2009–ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருவதாகவும், திரு.ப.முத்துக்குமார், குடிநீர் திட்டப் பொருத்துநர் குடிநீர் திட்டப் பணிகளை மட்டுமே மேற்கொண்டு வருவதாகவும், அலுவலகத்தில் குடிநீர் சம்பந்தமான பதிவேடுகள் மற்றும் குடிநீர் திட்டப் பணிகள் பராமரிப்பு போன்ற பணிகள், மற்றும் தினசரி நாட்குறிப்பு பதிவேடுகள், தினசரி மேற்கொள்ளப்படும் விவரம் பதிவு செய்து கையொப்பம் பெறுவது போன்ற பணிகளை மட்டுமே

மேற்கொள்வதாகவும், செயல் அலுவலரின் அனுமதியின்றி தன்னிச்சையாக எவ்வித முறைகேடுகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

27.12.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான மருதூர் பேரூராட்சி செயல் அலுவலர் (பொ) திரு.எம்.விஜயசங்கர் தனது வாக்குமூலத்தில் தான் பழைய ஜெயங்கொண்ட சோழபுரம் பேரூராட்சி செயல் அலுவலராகவும், மருதூர் பேரூராட்சியில் கூடுதல் பொறுப்பு வகிப்பதாகவும் தெரிவித்து, முறையீட்டு மனுதாரரின் மனு விவரம் தெரியும் எனவும், அவர் புகார் எழுதும் பழக்கம் உள்ளவர் எனவும், ஆதாயம் பெற்றுக் கொண்டு புகார்கள் எழுதுவார் எனவும், தான் பழைய ஜெயங்கொண்ட சோழபுரம் பேரூராட்சியில் செயல் அலுவலராகவும், மருதூர் பேரூராட்சியில் கூடுதல் பொறுப்பில் இருப்பதால் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் அலுவலக பணியாளர்களுக்கு உதவியாக இருக்குமாறு பொருத்துநரிடம் கூறியதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

27.12.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான, மருதூர் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலரும், தற்போதைய சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலருமாகிய திரு.கு.சண்முகம் தனது வாக்குமூலத்தில், தான் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், மருதூர் பேரூராட்சியில் 2011ம் வருடத்தில் தொடர்ந்து இரண்டு வருடமும், 2016ல் ஒரு நான்கு மாதமும் செயல் அலுவலராக பணிபுரிந்திருப்பதாகவும், முறையீட்டு மனுதாரர் தொடர்ந்து புகார் எழுதும் பழக்கம் உடையவர் எனவும், தான் பணியில் இருக்கும்போது பல பேரிடம் ஆதாயம் பெற்றுக் கொண்டு அவர்களுடைய வேலையாக வருவார் எனவும், மனுதாரர் புகார் எழுதுவது, ஏமாற்றுவது போன்ற வேலைகளை செய்வார் எனவும், சுய வேலை ஏதும் இல்லாதவர் எனவும் தெரிவித்துள்ளார். 2016ல் உள்ளாட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு ரத்து செய்த போது தான் மருதூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், திரு.முத்து என்பவர் வார்டு உறுப்பினர் பதவிக்கு வேட்பு மனு தாக்கல் செய்யும் பொருட்டு, அப்போது வரி விதிப்பு எண். 2824, ரசீதுச் சீட்டு எண். 9877/நாள். 15.11.2011ல் ரூ.2,002/- திரு.முத்து என்பவரிடம் இருந்து வசூலிக்கப்பட்டதாகவும், இது 2016-17 ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான நடப்பு சொத்து வரிக்காக வசூலிக்கப்பட்டதாகவும், இது நடப்பு வரி எனவும், நிலுவை வரி அல்ல எனவும் தெரிவித்துள்ளார். எனவே குற்றச்சாட்டில் தெரிவித்துள்ள விவரம் உண்மை இல்லை எனத் தெரிவித்துள்ளதுடன், வரித்தண்டலர் மற்றும் இளநிலை உதவியாளர்கள் சரிபார்த்து சான்றொப்பம் அளித்த பின்னரே மேற்படி நபருக்கு தன்னால் தடையில்லா சான்று வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

27.12.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான மருதூர் பேரூராட்சி செயல் அலுவலராக பொறுப்பு வகிக்கும் திரு.கு.வெங்கடேசன் தனது வாக்குமூலத்தில், தான் புகளூர் காகித ஆலை பேரூராட்சியின் செயல் அலுவலராக பணி புரிவதாகவும், மருதூர் பேரூராட்சியில் கூடுதல் பொறுப்பில் உள்ளதாகவும், முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு விவரம் தனக்கு தெரியும் எனவும், முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் தன்னுடைய பணிக்காலத்திற்கு சம்பந்தமற்றவை எனவும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை தவறாக பயன்படுத்தி தொடர்ந்து தங்களை முறையாக பணி செய்யவிடாமல் விவரம் கேட்டுக் கொண்டே இருப்பார் எனவும், திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுப்பார் எனவும், நேரம் கடந்து விட்டால் மாவட்ட ஆட்சியரின் முகாம் அலுவலகத்திற்கு சென்று மனு கொடுப்பார் எனவும், பேரூராட்சி அலுவலகத்திற்கு பல விஷயமாக பொதுமக்களிடம் பணம் பெற்றுக் கொண்டு அவர்களின் சார்பாக வருவார் எனவும், இவர் வட்டாட்சியர் அலுவலகத்தில் சில பிரச்சினைகள் செய்ததின்

காரணமாக அலுவலர் மற்றும் பொதுமக்களிடம் அடி வாங்கியுள்ளதாகவும், பேரூராட்சியில் ஆட்கள் பற்றாக்குறை இருப்பதால் அலுவலகப் தொடர்பான சில பணிகளை பொருத்துநர் பார்ப்பார் எனவும், வரி வசூலர் பணியிடம் காலியாக உள்ளதாலும், ஏற்கனவே பணியாளர் பற்றாக்குறை காரணமாகவும் வரி வசூல் செய்வதில் திரு.ப.முத்துக்குமார் தனது பகுதி ரசீதுகளில் கையொப்பம் செய்வார் எனவும், இது சம்பந்தமாக பொதுமக்களிடம் இருந்து எந்த புகாரும் திரு.ப.முத்துக்குமார், பொருத்துநர் மீது வரப்பெறவில்லை எனவும், முறையீட்டு மனுதாரர் பல போலி பெயர்களில் புகார்கள் எழுதி பணம் பெறுவதுதான் அவரின் பணி எனவும், இதன்பொருட்டு இங்கு யாரும் நிரந்தர செயல் அலுவலராக வருவது இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

27.12.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான மருதூர் பேரூராட்சி குடிநீர் திட்டப் பொருத்துநர் திரு.ப.முத்துக்குமார் தனது வாக்குமூலத்தில், திரு.ந.சந்திரன் என்பவரின் முறையீட்டு மனு விவரம் தனக்குத் தெரியும் எனவும், மருதூர் பேரூராட்சியில் சுமார் 6 ஆயிரம் வரி விதிப்புகள் இருக்கும் எனவும், அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் இருக்கிற பணியாளர்களுக்கு பணிகளை பிரித்துக் கொடுத்து வரி வசூல் செய்யச் சொல்வார்கள் எனவும், இதற்கென பேரூராட்சி செயல் அலுவலர் அலுவலக ஆணையே போட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில்தான், தான் வரி வசூல் செய்ததாகவும் தெரிவித்துள்ளார். தான் தன்னுடைய பணிகளை முழுமையாக செய்து வருவதாகவும், தன் மீது எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லை எனவும், முறையீட்டு மனுதாரர் அலுவலகத்தில் வரி விதிப்பு மாற்ற பரிந்துரை செய்ய வருவார் எனவும், அவருக்கு காரியம் முடியாவிட்டால் இதுபோன்று புகார் மனு அனுப்பும் பணிகளை மேற்கொள்வார் எனவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் தனது வீட்டிற்கு பேரூராட்சி அனுமதியின்றி தானே குடிநீர் வசதி செய்து கொண்டதாகவும், இதற்காக பேரூராட்சி அலுவலகம் மூலம் 15.06.2018 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டதாகவும், இதன் அடிப்படையில் மேற்படி குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் ஒவ்வொரு அலுவலகத்திலும் சென்று மிரட்டுவது, பணம் பறிப்பது போன்ற வேலைகளை செய்வார் எனவும், பணம் கொடுக்கவில்லை என்றால் இது போன்ற வேலைகளை செய்வார் எனவும், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இது போன்று ஒரு நிகழ்வு நடந்து கோட்டாட்சியரின் தனி உதவியாளரிடம் அடி வாங்கியதாகவும், பொதுமக்களிடம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு அடி வாங்கியதாகவும், தெரிவித்துள்ளார். பேரூராட்சி செயல் அலுவலரால் அலுவலகத்தில் குடிநீர் சம்பந்தமான புகார்கள் வந்த விவரம், நாட்குறிப்பு போன்ற பணிகளை செய்ய பணி ஒதுக்கப்பட்டால் அலுவலகத்திற்கு வந்து மேற்படி பணிகளை செய்வதாகவும், அவ்வாறு பணி செய்த போது முறையீட்டு மனுதாரர் தன்னை புகைப்படம் எடுத்ததாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

27.12.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான மருதூர் பேரூராட்சி இளநிலை உதவியாளர் திருமதி.கனகவள்ளி தனது வாக்குமூலத்தில், தான் 2009ம் ஆண்டு முதல் மருதூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிவதாகவும், அதற்கு முன்னர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தற்காலிகமாக பணிபுரிந்ததாகவும், இளநிலை உதவியாளர் பணியினை மட்டும் தான் மேற்கொள்வதாகவும், பொருத்துநர் அவரின் பணிகளை கவனிப்பார் எனவும், தனது பணியினை பொருத்துநர் செய்வதில்லை எனவும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் ஒருவருக்காக சொத்து வரி பெயர் மாற்றம் செய்வதற்காக வந்ததாகவும், விதிகளின்படி செய்ய முடியாது என்பதால் தான் மறுத்ததாகவும், இவ்விவரம் 2011-12-ஆம் ஆண்டில் நடந்ததாகவும், வேறு சிலருக்காக வரி செலுத்துவதற்காகவும், பெயர் மாற்றம்

செய்வதற்காகவும் தொடர்ந்து வருவார் எனவும், மேற்படி கோரிக்கைகள் தங்களால் செய்ய முடியவில்லை என்றால் செயல் அலுவலரை அவர் பார்ப்பதாகவும், கடந்த ஆண்டு பேரூராட்சிக்குத் தெரியாமல், பேரூராட்சிக்கு உரிய கட்டணம் செலுத்தாமல் தன்னிச்சையாக தனது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு செய்து கொண்டதாகவும், மேற்படி விவரத்தினை பொருத்துநரும், மற்றொரு நபரும் புகார் செய்ததாகவும், இதன் அடிப்படையில் தற்போது குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டதாகவும், மேற்குறிப்பிட்ட காரணங்களினால் தன் மீது ஏற்பட்ட வெறுப்பின் காரணமாக இந்தப் பொய்யான புகாரினை எழுதியுள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

28.12.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.ந.சந்திரன் தனது வாக்குமூலத்தில், 10.10.2018 நாளிட்ட புகார் மனு தன்னால் அனுப்பப்பட்டதாகவும், தான் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மை எனவும், தனது மனுவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகளையே தனது வாக்குமூலமாக ஏற்றுக் கொள்ளவும், உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். தான் கூறியுள்ள 6 குற்றச்சாட்டுகளுக்கும் ஆதாரமாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆவண நகல்களை சமர்ப்பித்துள்ளதாகவும், குற்றச்சாட்டு 1 முதல் 6 வரை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அதிகார பூர்வமான ஆவணங்களை சமர்ப்பிப்பதாகவும், மருதூர் பேரூராட்சியின் பொருத்துநர் திரு.ப.முத்துக்குமார், என்பவர் நிர்வாக அதிகாரிக்கு உதவியாக அலுவலகத்தில் வேலை பார்க்கிறார் என்பதற்கும், பொருத்துநர் வேலை பார்ப்பதில்லை என்பதற்கும் ஆதாரமாக ஒரு குறுந்தகட்டினை சமர்ப்பித்துள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனுவிற்கான மருதூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர், மருதூர் பேரூராட்சி முன்னாள்/இந்நாள் செயல் அலுவலர்கள், இளநிலை உதவியாளர் மற்றும் பொருத்துநர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களை தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலேயே முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் முறையீட்டு மனுதாரால் சமர்ப்பிக்கப்பட்ட குறுந்தகட்டில் பொருத்துநர் அலுவலகத்தில் அமர்ந்து அலுவலக பணிகளை கவனிப்பது போன்ற காட்சி அடங்கியுள்ளதே தவிர, வேறு எந்தவிதமான விவரமும் இல்லை. அவ்வாறு அலுவலக பணிகளை கவனிக்க மருதூர் பேரூராட்சியில் பணியாளர் பற்றாக்குறையினால் பேரூராட்சி செயல் அலுவலரால் அலுவலக ஆணை எண்.01/2015/நாள் 04.05.2015ல் குடிநீர் குழாய் பொருத்துநர் திரு.ப.முத்துக்குமார் அலுவலக இளநிலை உதவியாளர்களுடன் இணைந்து பணிபுரியவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள புகாரில் குறிப்பிட்டுள்ள ரசீதுகளில் திரு.முத்து என்பவரால் 2016–17–ஆம் ஆண்டிற்கான நடப்பு வரி மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. மேலும், நிலுவை வரி எதும் அதில் இடம் பெறாத நிலையில் நிலுவையின்மை சான்று வழங்கியது தவறு என பேரூராட்சி செயல் அலுவலரின் ஆவணங்களின் மூலம் தெரிய வந்துள்ளது. நிரூபணமாகவில்லை. முறையீட்டு மனுதாரர் பேரூராட்சியின் அனுமதியின்றி தனது வீட்டிற்கு குடிநீர் குழாய் இணைப்பு பெற்றமை குறித்து, திரு.வேல்முருகன் என்பவரின் 27.07.2018 நாளிட்ட தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் கோரிய கடிதத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டமை குறித்தும் இம்முறைமன்ற நடுவத்தின் கவனத்திற்கு வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது. மேலும் முறையீட்டு மனுதாரர் விதிகளுக்கு புறம்பாக அனுமதியின்றி

ஏற்படுத்திய குடிநீர் இணைப்பு பேரூராட்சியால் துண்டிப்பு செய்யப்பட்டதும் வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்களின் மூலம் உறுதி செய்யப்பட்டது. எனவே, மேற்கண்ட ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு, மனு ஆதாரமற்றது என தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 27/2/2019

பெறுநர்

1.திரு. ந.சந்திரன்,
த/பெ திரு.நல்லி,
க.எண். 12/36, குப்புரெட்டிபட்டி,
இனுங்கூர் அஞ்சல்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்–639110.

2.செயல் அலுவலர்,
மருதூர் பேரூராட்சி,
மருதூர்,
கரூர் மாவட்டம்.

3.திரு.சண்முகம்,
செயல் அலுவலர்,
திருப்பத்தூர் பேரூராட்சி,
சிவகங்கை மாவட்டம்.

4.திரு.ப.முத்துக்குமார்,
குடிநீர் குழாய் பொறுத்துநர்,
மருதூர் பேரூராட்சி,
கரூர் மாவட்டம்.

5.திருமதி.கனகவள்ளி,
இளநிலை உதவியாளர்,
மருதூர் பேரூராட்சி,
கரூர் மாவட்டம்.

6.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
கரூர்.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்
முறைமன்ற நடுவ செயலாளரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்